12

# கிறிஸ்தவ ஜீவியம் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

*கிறிஸ்தவம் வெறும் விசுவாசத்திற்குரிய முறைப்படுத்துதல் மட்டுமல்ல; அது வாழ்வின் வழியாய் இருக்கிறது; ஒரு நபர் திருமறை கூறும் எல்லாவற்றையும் விசுவாசித்தாலும், அந்த விசுவாசத்திற்கேற்ற செயல்களைச் செய்யாதிருந்தால் அது எந்த நன்மையையும் பயக்காது!*

*எப்படியிருப்பினும், புதிய கிறிஸ்தவன் "நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?" என்று வியப்படையலாம்; "என்ன செய்யும்படி என்னுடைய விசுவாசம் என்னை நடத்த வேண்டும்?" "கர்த்தர் என்னிடத்திலிருந்து இப்போது எதிர்பார்ப்பது என்ன?" இந்தத் கேள்விகளுக்கான பதில்களெல்லாம் வசனங்களில் காணப்படுகின்றன. திருமறை போதிப்பவைகளை மனதில் கொண்டு, தேவனுடைய பிள்ளை பரலோகத்துக்குப் போக வேண்டுமானால் உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிப்பது அவசியம் என நாம் விசுவாசிக்கிறோம்.*

## நாம் ஏன் உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்க வேண்டும்?

கிறிஸ்தவர்களாகிய நமக்கு, தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்கும்படி நம்மை ஊக்கப்படுத்தும் காரியங்கள் அநேகமுண்டு. கர்த்தர் நமக்குச் செய்துள்ள எல்லாவற்றையும் காணும்போது அவரிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பும் நன்றியுணர்வும் அவருடைய சித்தத்தை நாம் மகிழ்ச்சியோடு நிறைவேற்றச் செய்யும் என்பது நிச்சயம். எல்லாவற்றிலும், நாம் இரட்சிக்கப்படுவதற்கு தகுதியற்றவர்களாயிருந்தும், தமது கிருபையால் நம்மை அவர் இரட்சித்தார்! இயேசுவின் அழைப்பைக் கேட்டவர்கள் முதல் நூற்றாண்டில் அவரைப் பின்பற்றிப் போக ஆயத்தமாயிருந்ததைப் போல (மத்தேயு 4:18-20; யோவான் 1:35-50), கிறிஸ்துவுக்கு உண்மையாய் ஊழியஞ் செய்வதற்காக சந்தர்ப்பம் கிடைத்ததற்காக களிகூர்ந்து மகிழ வேண்டும்.

அதோடு, நித்தியத்துக்கும் நாம் இழந்தவர்களாயிருந்துவிடாதபடி, உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை நாம் ஜீவிக்க (வாழ) வேண்டும். விசுவாசத்தை விட்டு வழுவிப்போதல் (விலகிப்போதல்) சாத்தியமானது. கிறிஸ்தவர்கள் தேவனை விட்டு பின் வாங்கிப் போகக் கூடும், மீண்டும் பாவ வாழ்க்கையை வாழ்ந்து, இழந்தவராகக் கூடும். விழுந்து போவது சாத்தியம் என்று நமக்கு எப்படித் தெரியும்?

1. புதிய ஏற்பாடு விழுந்து போதலின் சாத்தியக் கூறுகளைப் பேசுகிறது (1 கொரிந்தியர் 9:27).
2. விழுந்து போகாதிருக்க புதிய ஏற்பாடு எச்சரிக்கிறது. பவுல், "... தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் தான் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" (1 கொரிந்தியர் 10:12; காண்க எபிரெயர் 3:12) என்கிறார்.
3. விழுந்து போன கிறிஸ்தவர்களைக் குறித்து புதிய ஏற்பாடு பேசுகிறது. கலாத்தியர் 5:4 "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள்; யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்"; எபிரெயர் 6ல் "ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும்," "பரம ஈவை ருசிபார்த்தும்," "பரிசுத்த ஆவியைப் பெற்றும்," "தேவனுடைய நல்வார்த்தையையும் ருசி பார்த்தும்," பிறகு "மறுதலித்துப் போனவர்கள்" என்று குறிப்பிடுகிறது (வசனங்கள் 4-6).
4. பாவம் செய்த ஒரு கிறிஸ்தவனைக் குறித்து புதிய ஏற்பாடு உதாரணம் கொடுக்கிறது. மாய வித்தைக்காரனாகிய சீமோனைப் பற்றிய காரியத்தில் (நடபடிகள் 8:9-24), பேதுரு ஒரு கடுமை யான கடிந்து கொள்ளுதலைச் செய்தார், அவர் "... உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாய் இல்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப் படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக் கட்டியிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காணுகிறேன்" (வசனங்கள் 21-23) என்று சொன்னார்.
5. விழுந்து போன ஒருவரை மீட்டுக் கொண்டு வர முயற்சி செய்யும்படி புதிய ஏற்பாடு கூறுகிறது. கிறிஸ்தவர்கள், இப்படிப்பட்ட சாதனையைச் செய்தால் "மரணத்தினின்று அவனுடைய ஆத்துமாவைத் தப்புவிக்கிறான்" (யாக்கோபு 5:19, 20; காண்க கலாத்தியர் 6:1).
6. விழுந்து போவதன் விளைவுகளைக் குறித்து புதிய ஏற்பாடு பேசுகிறது (எபிரெயர் 10:26-31).

*விழுந்துபோவது சாத்தியமானதால், கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது அவசியம்.*

## உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்க நம்மிடம் தேவைப்படுவது என்ன

உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்துக்கு தேவையானது ஒன்று மட்டுமே என்று நாம் சொல்லலாம். உதாரணமாக, கிறிஸ்தவர்களின் செயல்களும் அவர்கள் இருக்க வேண்டிய விதமும் ஒட்டு மொத்தமாகச் சுருக்கி எல்லாவற்றையும் அன்பினால் செய்ய வேண்டும் எனலாம் (மத்தேயு 22:37-40). வித்தியாசப்பட்ட தோற்றத்தில் பார்த்தால், ஒருவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையைச் சுமந்து கொண்டு, இயேசுவை (மத்தேயு 16:24) பின்பற்றினால், அது முழு

கீழ்ப்படிதலை குறிக்கும் என்று சொல்லலாம், அதுவே போதுமான கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க அவசியமானது என்பர். வேறு சிலர், "நாம் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்பதன்படி செயல்படும்போது" (மத்தேயு 6:33) அல்லது "[நமது] சரீரத்தை தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும் போது" (ரோமர் 12:1), கர்த்தர் எதிர் பார்க்கிற எல்லாவற்றையும் நாம் அவருடைய சீஷர்களாக நிறைவேற்றுகிறோம், என்கின்றனர்.

எப்படியிருப்பினும், நாம் இன்னமும் சற்று குறிப்பாகக் காண வேண்டும். விசுவாசமுள்ள (உண்மையுள்ள) கிறிஸ்தவ வாழ்க்கை எப்படியிருக்கும்? தேவனைப் பிரியப்படுத்துகிற வாழ்க்கையை வாழ்வது என்பது பின்வரும் எல்லாவற்றையும் உள்ளடக்கியது:

*நமது நினைவை மாற்ற வேண்டும்.* திருமறை சொல்லுகிறது, "... அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்" (நீதிமொழிகள் 23:7அ). ஒருவன் கிறிஸ்தவனாக மாறின பின், அவனுடைய நினைவுகளைக் குறித்து அதிகக் கவனம் செலுத்த வேண்டும். தவறான நினைவுகள் தவறான செயல்களுக்குச் சமமானது என்பதை அவன் உணரவேண்டும் (மத்தேயு 5:22, 28). இதன் விளைவாக, தனது தீமையான எண்ணங்களை விட்டு விட்டு "உண்மை ... ஒழுக்கம் ... நீதி ... கற்பு ... அன்பு ... [மற்றும்] நற்கீர்த்தி" ஆகியவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:8). கிறிஸ்தவன் என்ற வகையில் நினைக்கக் கற்றுக்கொள்ளும்போது, கிறிஸ்தவ வாழ்வை வாழும் வழியில் சென்று கொண்டிருப்பான்.

*கிறிஸ்தவ எண்ணப்போக்குகளை அதிகப்படுத்தி கிறிஸ்தவ குணாதிசயங்களில் வளருதல்.* கிறிஸ்துவின் சீஷர்களை அடையாளப் படுத்துவது யாதெனில், முழுமையாகவோ பிரதானமாகவோ, அவர் செய்கிற செயலில் இல்லை; மாறாக, அவர்கள் என்னவாக இருக்கிறார்கள், அவர்களின் தன்மையை வெளிப்படுத்தும் விதம் ஆகியவற்றில் தான் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் அடிக்கடி குறிப்பிட்ட சில எண்ணங்களை விருத்தி செய்து கொள்ளும்படி சொல்லப்படுகிறார்கள். உதாரணமாக, எபேசியர் 4:31, 32, சொல்லுகிறது, "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (காண்க கொலோசெயர் 3:12-14; மத்தேயு 5:1-12).

ஒருவேளை ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவைப்படுகிற பலதரப்பட்ட குணாதிசயங்களையும் சொல்லவேண்டுமானால் அவன் அன்புள்ளவனாயிருக்க வேண்டும். அன்பு என்பது 1 கொரிந்தியர் 13:4-7ல் விளக்கப்படுத்தப் பட்டிருக்கிறபடியாக, அவன் ஒரு அன்புள்ள நபராக மாற வேண்டும்.

> அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது; தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்; சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய பிள்ளையாக மாறினவுடனேயே இந்த குணாதிசயங்களை தாமாக பெற்றுக் கொண்டு விட முடியாது. ஜெபத்தாலும், திருமறை வாசிப்பாலும், ஊக்கமான பிரயாசத்தாலும் - வாழ்நாள் காலம்முழுவதும் - அவன் இந்த குணாதிசயங்களை தன்னிடத்தில் கூட்டி, ஆவிக்குரிய வளர்ச்சியை அடைகிறான் (காண்க 2 பேதுரு 3:18). இப்படியாக, 2 பேதுரு 1:5-7ல் சொல்லப்பட்ட கிறிஸ்தவ கிருபைகளை படிப்படியாக சம்பாதித்துக் கொள்கிறான், மேலும் கலாத்தியர் 5:22, 23ல் சொல்லப்பட்ட ஆவியின் கனிகளை பெருக்குகிறான். அவனது வளர்ச்சியின் விளைவாக அவன் வளர்ச்சியுற்ற (உத்தம) கிறிஸ்தவனாகிறான். இவைகளில் பெருகினால் அவன் “ஒருக்காலும் இடறி விழுவதில்லை” (2 பேதுரு 1:10).

*சபைக்கு உண்மையுள்ளவனாயிருத்தல்.* சபைக்கு புறம்பே ஒருவன் விசுவாசமுள்ள (உண்மையுள்ள) கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்று சிலர் நினைக்கின்றனர். திருமறை அதற்கு மாறாக போதிக்கிறது. கிறிஸ்தவர்கள் சபையில் கூடிவர வேண்டும் (எபிரெயர் 10:24, 25), சபைக்குக் கொடுக்க வேண்டும் (1 கொரிந்தியர் 16:1, 2), மற்றும் சபையின் நலனுக்காக தனது தாலந்துகளை பயன்படுத்த வேண்டும் (1 கொரிந்தியர் 12).[1]

*பிறருக்கு நன்மை செய்வது.* கிறிஸ்தவர்கள் பிறருக்கு உதவி செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் ஜனங்கள் அவர்கள். தேவன் எப்பொழுதுமே துர்பாக்கியமுள்ளவர்களான, அனாதைகள், விதவைகள், ஏழைகள், தரித்திரர்கள், மற்றும் பரதேசிகள் என யாவர் மேலும் அக்கரையுள்ளவராயிருந்திருக்கிறார். இயேசு சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப் பட்டவர்கள் மேலும் எப்பொழுதுமே அக்கரை காட்டினார் - குஷ்டரோகிகள், பாவிகள், ஆயக்காரர்கள், விபசாரத்தில் பிடித்து வரப்பட்ட ஸ்திரீ - மற்றும் வியாதியஸ்தர்களை அடிக்கடி சுகப் படுத்தினார். இப்படி துர்பாக்கியமுள்ளவர்களோடு தேவனுடைய கரிசனையை நாம் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். யாக்கோபு, “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது” என்றார் (யாக்கோபு 1:27; காண்க மத்தேயு 25:31-46; கலாத்தியர் 6:10). தரித்திரருக்கும் துர்பாக்கியமுள்ளவர்களுக்கும் உதவி செய்வதால், நமது வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்கிறோம், இதன் விளைவாக “மனுஷர்கள் [நம்முடைய] நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற [நம்முடைய] பிதாவை மகிமைப் படுத்துவார்கள்” (மத்தேயு 5:16).

*பிரதான கற்பனையை நிறைவேற்றுதல்.* கிறிஸ்தவர்கள் பிரதான கற்பனையை நிறைவேற்றுவதில் தங்களையும் உட்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியிலே தாங்களாகவே சபை சிறியதாக இருக்கிற இடங்களிலோ அல்லது சபையே இல்லாத இடங்களில் போய் வித்தியாசப்பட்ட கலாச்சாரம் உள்ள மக்கள் மத்தியிலே பிரசங்கிக்கிற அளவுக்கு தயார்படுத்தப்பட்டவர்களல்ல. ஆயினும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிரதான கற்பனையை நிறைவேற்றுவதில் ஏதோ ஒரு வகையில் உதவிகரமாய் இருக்க முடியும். சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்களுக்கு உதவி அனுப்பலாம் (ரோமர் 10:13-15), நமது சொந்த சமுதாயத்தின் மத்தியில் சுவிசேஷத்தைப் பரப்ப நம்மால் இயன்ற எல்லா வகையிலும் உதவிபுரிய வேண்டும். முதல் நூற்றாண்டில்

*“சாதாரண” “கிறிஸ்தவர்கள்” எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (நடபடிகள் 8:4).*

*“உலகத்தால் கறைபடாதபடி” நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். (யாக்கோபு 1:27). கூடுதலாக, இயேசுவின் சீஷர்களாக நாம், செய்கிற காரியங்களுடன் நாம் செய்யாத காரியங்களினிமித்தம் அறியப்பட்டிருப்பது அவசியம். புதிய ஏற்பாட்டில் அடிக்கடி, உலகத்தாரைச் சுட்டிக் காட்டுகிற பாவ எண்ணங்கள் மற்றும் செயல்களை நாம் தவிர்க்க வேண்டும். என்று கூறப்பட்டிருக்கிறோம். “இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்தவேஷம் தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறு ரூபமாகுங்கள்” என்று பவுல் சொன்னார் (ரோமர் 12:2அ; காண்க 1 யோவான் 2:15, 16). பொதுவாகவே, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் நேர் மறைக் கருத்துக்களை சேர்த்துக் கொள்ளச் சொல்லுகிற அதே வேளையில், எதிர்மறைக் காரியங்களான, பாவக் குணாதிசயங்களை தவிர்க்கவும் பரிந்துரைத்தனர் (காண்க, உதாரணமாக, எபேசியர் 4:25-5:5; கொலோசெயர் 3:1-4).*

*நமது வாழ்வின் ஒவ்வொரு நோக்கத்தையும் கிறிஸ்துவே வழிநடத்த விட்டு விட வேண்டும். சாராம்ஸமாக, கிறிஸ்தவவாழ்வில் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பாகமும் கிறிஸ்துவாலும் அவருடைய வார்த்தைகளினாலும் கட்டுப்படுத்த விட்டு விட வேண்டும். புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கான போதனைகளாகப் போதிக்கிறவைகளாவன (1) விவாகமும் வீடும் (எபேசியர் 5:22-6:4; கொலோசெயர் 3:18-21; 1 பேதுரு 3:1-7); (2) பணிகளைக் குறித்த கடமைகள், பணியமர்ந்தவர்களும் அமர்த்தியவர்களுக்குமான விதி முறைகள் (எபேசியர் 6:5-9; கொலோசெயர் 3:22-4:1; 1 பேதுரு 3:18-20); (3) புறம்பேயிருப்பவர்களுடன் கிறிஸ்தவனின் நட்புறவு (1 பேதுரு 2:12) மற்றும் சத்துருக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய விதம் (மத்தேயு 5:43-48); (4) தனது அரசாங்கத்திற்கு கிறிஸ்தவனின் கடமை (1 பேதுரு 2:13-17; ரோமர் 13:1-7; மத்தேயு 22:17-21). உண்மையில் கிறிஸ்தவனின் வாழ்வின் ஒவ்வொரு தோற்றமும் அவன் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் என்கிற உண்மை வெளிப்பட வேண்டும். “கிறிஸ்தவம் என்பது குறிப்பிட்ட சிலவற்றைச் செய்கிற மார்க்கமல்ல; அது குறிப்பிட்ட வழியில் எல்லாவற்றையும் செய்கிற மார்க்கம்.”*

## நாம் விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வோமானால் எப்பொழுது நமக்கான பிரதிபலன் கிடைக்கும்?

*கிறிஸ்துவுக்காக வாழ்பவர்களுக்கென ஒரு சுதந்திரமான பிரதிபலன் கொடுக்கப்படும் என்பதை புதிய ஏற்பாடு திரும்பத் திரும்ப பேசுகிறது (கொலோசெயர் 3:24). எப்பொழுது கிறிஸ்தவர்கள் தங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிரதிபலனை அடைவார்கள் என்பதற்கு இரண்டு பதில்கள் காணப்படுகின்றன.*

*முதலாவதாக, இம்மையிலேயே நாம் பலனளிக்கப் படுவோம். கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாய் வாழ்வது பரிபூரண ஜீவனைப் பெற நமக்கு உதவும் (யோவான் 10:10) - ஆவிக்குரிய ஆசீர்வாதம் நிறைந்த ஒரு வாழ்க்கை (எபேசியர் 1:3) சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் வெளிப்படும் (யோவான் 14:27; 16:33;*

*பிலிப்பியர் 4:4, 7; கொலோசெயர் 3:15).* மேலும் தேவனுடைய பிரமாணத்தைத் தொடர்ந்து மீறிக் கொண்டிருப்பவர்களைக் காட்டிலும் கிறிஸ்து காட்டுகிற வழியில் வாழ்பவர்கள் எவ்வளவோ சிறப்பான வாழ்வைப் பெறுவார்கள். உதாரணமாக, திருமண பந்தத்தில் நிலைத்திருப்பவர்கள், சட்டத்தை மீற மாட்டார்கள், தங்களைப் பணியமர்த்தினவர்களுக்கு நேர்மையாய் பணிபுரிகிறார்கள், உலக காரியங்களில் சிக்கிக் கொள்ளாமல் சோதனையை எதிர்த்து நிற்கிறார்கள், ஆதலால் செழிப்படையவும் வாழ்வை நிறைவானதாகவும் நடத்துகிறார்கள். பாவ வாழ்வாகிய மதுபான வெறிகொண்டு, சட்டத்துக்குப் புறம்பான மதுபானம் அருந்தி, சூதாடி, பாலியல் ஒழுங்கீனங்களை நடப்பிக்கிற தனிப்பட்ட நபர்களுக்கு அப்படி நடப்பதில்லை.

விசுவாசம் உள்ள கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட பிரச்சனைகளையோ உபத்திரவங்களாயோ அனுபவிக்க மாட்டார்கள் என்று பொருள் அல்ல. உண்மையில், கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களாகத் தொல்லைகளை எதிர் கொள்வார்கள், ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் (மத்தேயு 5:10-12; 2 தீமோத்தேயு 3:12; 1 பேதுரு 4:12-16). அப்போஸ்தலர் நடபடிகளில் ஏராளமான உபத்திரவங்களை பரிசுத்தவான்கள் அனுபவித்ததாகக் கொடுக்கப் பட்டுள்ளது. இன்று தேவன் உலகப் பிரகாரமான பொருளாதார வாக்குறுதி களை தமது பிள்ளைகளாக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக கொடுப்பதில்லை; மாறாக, அவர் "நீதிமான்கள் மேலும் அநீதிமான்கள் மேலும் மழையைத் தருகிறார்" (மத்தேயு 5:45). கர்த்தர் கொடுக்கும் வாக்குறுதி என்னவெனில் சோதனை நேரங்களில் நம்மோடு இருப்பார் என்பது தான் (மத்தேயு 28:20). ஆதலால் நமக்கு ஒன்றும் நேரிடாது - எவ்வளவு பயங்கரங்கள் வந்தாலும் - எதுவும் அவருடைய அன்பிலிருந்தும் பராமரிப்பிலிருந்தும் நம்மை பிரிக்க மாட்டாது (ரோமர் 8:31-39).

*இரண்டாவதாக, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் (உண்மையுள்ள கிறிஸ்தவர்கள்) இன்னொரு வாழ்க்கையில் தங்கள் பிரதிபலனைப் பெற்றுக் கொள்வார்கள்.* இயேசு, "மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்றார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10ஆ; காண்க மத்தேயு 25:34, 46). கடினமான நேரம் வரும்போது, உபத்திரவப்படும் கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்து இந்த பூமியின் எல்லைக்கு அப்பால் தங்களுக்கெனக் கட்டப்பட்ட நித்திய வாசஸ்தலமாகிய பரம பட்டணத்தை, விசுவாசக் கண்களினாலே, காணமுடியும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-4; யோவான் 14:1-3).

விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் இம்மையிலும் நித்திய நித்தியமான மறுமையிலும் ஆசீர்வதிக்கப் படுவதை எதிர் நோக்கியிருக்கலாம். தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாவது இந்த உலகத்திலே சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டு வரும் மற்றும் நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தையும் கொடுக்கிறது (மாற்கு 10:29, 30).

# விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிப்பது எப்படி?

*பரலோகப் பாதை சுலபமானதல்ல (மத்தேயு 7:13, 14). நித்திய ஜீவனுக்குக் கொண்டு செல்லும் பாதையில் நடந்து செல்ல முயற்சிப்பதில் அநேக தடைகளை சந்திக்க வேண்டிவரும் அது "இடுக்கமும் ... நெருக்கமுமான வழி." பிசாசானவன் நமக்கு விரோதம் செய்து, நம்மைபாவம் செய்ய வைக்க முயலுவான், பேய்கள் அவனுடைய வேலையில் அவனுக்கு உதவுகின்றன. உலகமும் அதிலுள்ள ஜனங்களும் கிறிஸ்துவினிடத்திலிருந்து நம்மை பிரித்து உலகக் காரியத்தில் ஈடுபட வைக்க தொடர்ந்து முயற்சித்துக் கொண்டுள்ளது. அதோடு, நம்முடைய சொந்த மாம்சமே நம்மை பாவத்துக்கு ஒப்புக் கொடுக்கத் தக்க பலவீனத்தை ஏற்படுத்தி சோதனை செய்யும் (யாக்கோபு 1:13-15). சில வேளைகளில் கர்த்தருக்கு தொடர்ந்து விசுவாசமாயிருப்பது கூடாத காரியமாகக் தோன்றும்.*

*எப்படியிருப்பினும், கிறிஸ்தவர்கள் மனம் வைக்க முடியும். "செய்ய முடியும்" எனும் எண்ணமே ஏறத்தாழ எந்தச் செயலையும் வெற்றிகரமாக முடிக்க அவசியமானது. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ "செய்ய முடியும்" எனும் எண்ணத்தை நாமும் கொண்டிருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:13; எபேசியர் 3:20). நம்மால் செய்ய முடியும்! ஏன்?*

*(1) ஏனெனில் நமக்கு தெய்வீக உதவி இருக்கிறது. நம்முடைய சொந்த பலத்தில், பிசாசின் சோதனையை எதிர்க்க முடியாது, அல்லது கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்ற முடியாது. ஆயினும், கிறிஸ்தவர்களாகிய நாம், நமது சொந்த பலத்தைச் சார்ந்திருப்பதில்லை!*

- *நம்முடைய ஜெபத்தை தேவன் கேட்கிறார் (மத்தேயு 7:7-11) எதிர்த்து நிற்கத் தக்கதான திராணிக்குமேல் நாம் சோதிக்கப்படும்படி அவர் அனுமதிப்பதில்லை (1 கொரிந்தியர் 10:13). நமது சார்பாக தேவனுடைய முன் ஏற்பாட்டின்படி "சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்படி செய்கிறார்" (ரோமர் 8:28).*
- *கிறிஸ்து நமக்குள்ளே வாசம் பண்ணுகிறார் (கொலோசெயர் 1:27), அவர் எப்போதும் நம்மோடிருக்கிறார் (மத்தேயு 28:20), சோதிக்கப்படுகையில் உதவி செய்கிறார் (எபிரெயர் 2:17, 18) பிதாவினிடத்தில் நமது மத்தியஸ்தராயிருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 7:25), மற்றும் நம்மைப் பெலப்படுத்துகிறார் (பிலிப்பியர் 4:13).*
- *பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கப் பட்டுள்ளார் (நடபடிகள் 2:38; 5:32; எபேசியர் 1:13, 14; ரோமர் 5:5; கலாத்தியர் 4:6) நமது ஜெபங்களிலே உதவி செய்யவும் (ரோமர் 8:26) நம்மைப் பெலப்படுத்தவும் கொடுக்கப் பட்டுள்ளார் (எபேசியர் 3:16).*
- *சபை நம்மை ஊக்கப்படுத்துகிறது (எபிரெயர் 3:12, 13; 10:24).*
- *தேவனுடைய வசனம் நம்முடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கிறது (2 தீமோத்தேயு 3:16, 17), ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொடுக்கிறது (1 பேதுரு 2:2), "பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் சுதந்தரத்தை" அடைய நம்மைக் கட்டி எழுப்புகிறது (நடபடிகள் 20:32).*

*(2) ஏனெனில் நமக்குத் தெய்வீக மன்னிப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது.*

*எல்லாவித உதவிகளும் நமக்கு இருந்தும், கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக்கூடும் (1 யோவான் 1:8, 10). நம்மை நாம் சோதனைக்குள் விழப் பண்ணும்போது தன்னிச்சையாகவே நித்திய சுதந்திரம் நம்மை விட்டுப் போய் விடுகிறதா? நாம் பாவத்தில் தவறும்போது கிறிஸ்தவ வாழ்க்கைக்கென நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் தேவனுடைய மன்னிப்பும் அவரது உதவியும் நிறுத்தப்படும் பட்சத்தில் அப்படியாகும்! இருப்பினும், பாவம் செய்த கிறிஸ்தவன் மனந்திரும்பும் போது தேவனுடைய கிருபையினாலே கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் மன்னிக்கப்படுவோம் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (நடபடிகள் 8:22). அந்தப் பாவங்களை அறிக்கையிட்டு (1 யோவான் 1:9; யாக்கோபு 5:16), தேவனுடைய மன்னிப்பை ஜெபத்திலே தேட வேண்டும் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16). நாம் ஒளியிலே நடந்தால் - அதாவது, நாம் தொடர்ந்து முழுமனதோடு தேவனுடைய சித்தத்தை இயன்ற வரை சிறப்பாகச் செய்வோமாகில் - "இயேசுவின் இரத்தம்" நம்மை தொடர்ந்து பாவங்களற சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7).*

*கிறிஸ்தவ நம்பிக்கை ஒரு பூரணப்பட்ட வாழ்வை அடிப்படையாகக் கொண்டதல்ல அல்லது ஒரு தொகுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு தவறாது நிலைத்திருத்தலைச் சார்ந்ததுமல்ல, ஆனால் தேவனுடைய கிருபையை அடிப்படையாகக் கொண்டது! அவருடைய கிருபையினாலும் கிறிஸ்துவின் பலியினாலும், விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்வோருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிரதி பலன்களை அனுபவிக்க நாம் எதிர்பார்க்கலாம்!*

## முடிவுரை

*பெரும்பாலான விளையாட்டுப் போட்டிகளிலே, ஒரு நல்ல "தொடர் பிரயாசம்'' முக்கியமானது. ஒருவர் பந்தை எறிந்தாலும், அடித்தாலும், உதைத்தாலும் ''தொடர் பிரயாசம்'' வெற்றிபெற அவசியம் தேவை. அதேபோல தான், கிறிஸ்தவத்திலும், இரட்சிப்பைத் துவக்கி வைத்து விட்டால் போதுமானதல்ல. நம்முடைய பாவங்களிலிருந்து ஒரு முறை இரட்சிக்கப் பட்டது முதல் நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாகவும் மாறுகிறோம், தொடர்ந்து கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து நாம் "தொடர் பிரயாசத்தை" மேற் கொள்ள வேண்டும். ஒரு புதிய கிறிஸ்தவனிடத்திலே இயேசு பேசுவதாக கற்பனை செய்து கொள்வோம், அவர், "வாழ்த்துக்கள்! நீ சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்தாய், எனவே இரட்சிக்கப் பட்டுள்ளாய். இப்பொழுது நீ ஆரம்பித்தது போல தொடர்ந்து செயல்படும்படி உன்னிடத்தில் பரிந்து பேசுகிறேன்! எனக்கு நீ ஒப்புக் கொடுத்தபடி தொடர்ந்து பின்பற்று. உன் வாழ்வின் எஞ்சிய காலமுழுவதும் உண்மையுள்ளவனாயிருந்தால் நான் உனக்கு ஜீவ கிரீடத்தினால் பலனளிப்பேன்!"*

*உங்களைப் பற்றி என்ன? நீங்கள் தொடர்ந்து பிரயாசப் படுவீர்களா? நீங்கள் நல்ல துவக்கத்தைக் கொண்டு ஆரம்பித்திருந்தால், ஓட்டத்தை முடிப்பீர்களா (2 தீமோத்தேயு 4:7, 8)?*

குறிப்பு

*[1]கர்த்தருடைய நாளிலே மற்றவர்களோடு கிறிஸ்தவர்கள் கூடி ஆராதிப்பதற்கு அசாதாரண சூழ்நிலைகள் சில வேளைகளில் தடைகளை ஏற்படுத்தலாம் என்பது தெளிவு. உதாரணமாக, ஒருவர் வியாதிப்பட்டோ, முடமாகவோ ஏதோ ஒரு தனி இடத்தில் விடப் பட்டவராயிருப்பின், அவனோ அவளோ உள்ளூர் சபையில் தொடர்ந்து கலந்து கொள்ள இயலாது.*